

தனி பிரதி
ரூ.10/-


PORIYIYAL KADHIR



# பொறியியல் கதிர்

கதிர் 45 | பாரிப்பு 9 | திருவள்ளுவர் ஆணடு 2045 | மே 2014

## "மே" தின வாழ்த்துக்கள்!



**உழைப்பின் உன்னதத்தை உணர்ந்து,
உழைப்பாளர்களை ஊக்குவிக்கும் தேசமே
உன்னத நிலையை அடையும்.**

நூற்றாண்டு விழா சங்கம்

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD

தோற்றம்
1910

நூற்றாண்டு
2010

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 5.
...சு ஆணை எண்: Ms.822 நாள்.27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மை பொறியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர்
பொறி. ச.பெரியசாமி அவர்கள் தன் பணி ஓய்வை முன்னிட்டு அளித்த விருந்தில்
தியாகச் செம்மல் சி.ப.சண்முகம், கவிஞர் நெல்லை ஜெயந்தா, பொதுச் செயலாளர்
பொறி. D. முருகேசன், மதுரை கிளை செயலர் பொறி. சி.பி. மோகன்குமார்
ஆகியோர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்






தமிழ்நாடு வேளாண்மை பொறியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் பொறி. ச.பெரியசாமி அவர்கள் தன் பணி ஓய்வை முன்னிட்டு அளித்த விருந்தில் DECT மாநிலத் தலைவர் பொறி. M.ஊர்காவலன், கொள்கை பரப்பு செயலாளர் பொறி. ஆர்.ஞானபண்டிதன், கவிஞர் நெல்லை ஜெயந்தா ஆகியோர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்









பொதுச் செயலாளர் மடல்

மடல் - 9 (2013 - 2014)

## தொடரும்
## நம் பயணம் .......



**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

பொறியாளர் சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் மே தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். உழைப்பின் உன்னதத்தை உணர்ந்து, உழைப்பாளர்களை ஊக்குவிக்கும் தேசமே உயர்ந்த நிலையை அடையமுடியும். இந்தியாவில் உள்ள அனைத்து பொறியியல் துறைகளிலும் உழைப்பில் உயர்ந்து நிற்பவர்கள் பட்டயப் பொறியாளர்கள் மட்டுமே. இதை யாராலும் மறுக்க முடியாது. பட்டயப் பொறியாளர்களையும் பகுதிநேர பட்டப்படிப்பு படித்தவர்களையும் ஒடுக்க நினைப்பவர்கள் இதை புரிந்துக் கொண்டால் மட்டுமே சம்பந்தப்பட்ட துறைகள் உயர்வடையும்.

உதவி செயற்பொறியாளர் (மின்னியல்) பதவி உயர்வுக்கான கருத்துரு முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து அரசுக்கு அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டு வந்தது. கடந்த 25.04.14 அன்று சங்கத்தின் சார்பாக முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களை சந்தித்து கேட்டபொழுது ஒரு வார காலத்திற்குள் அரசுக்கு கருத்துரு அனுப்பி விடுவதாக கூறி உள்ளார்.

பகுதிநேரப் பட்டப்படிப்பு படித்த இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளராக பதவி பெயர் மாற்றம் **[Redesignation]** வழங்குவதற்கு முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து கருத்துரு கோரப்பட்டு அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கும் கடிதம் அனுப்பட்டுள்ளது. அதில் கோரியுள்ள விவரங்களை உடனடியாக முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க தனி நபர்களும், சங்க பொறுப்பாளர்களும் உரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

பட்டயம் படித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர்கள் பதவி உயர்வு அளிக்கும் கோப்பு மிகுந்த கால தாமதம் ஆவதை சுட்டிக் காட்டி 25.04.14 அன்று முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களிடம் பேசியபோது, உரிய கண்காணிப்பாளரை நேரில் அழைத்து கோப்பை உடனடியாக அரசுக்கு

அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு கூறினார். இணைத் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களிடமும் உரிய நடவடிக்கை எடுக்கக் கூறினார்.

உதவிப் பொறியாளர்களின் பணி வரன்முறை சம்பந்தமாக தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

மீதமுள்ள இளநிலைப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் பணி வரன்முறை செய்யப்பட உரிய முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

பொதுச் செயலாளர்

**D. முருகேசன்,** பொதுச் செயலாளர் செல்பேசி எண் 9444 999 588 9281 309 688
E.mail: d.murugavelsivan@gmail.com

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் உறுப்பினர் பொறியாளர். P.B. மோகன், கண்காணிப்புப் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தன் மகள் திருமண நன்கொடையாக ரூ. 1001/-(ரூபாய் ஆயிரத்து ஒன்று மட்டும்) மையச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் B.சக்காஜி, உதவி செயற்பொறியாளர் அவர்கள் தன் மகன் திருமண நன்கொடையாக ரூ. 500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) மையச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கன்னியாகுமரி கிளை உறுப்பினர் பொறியாளர் U.V.சண்முகஸ்ரீ, இளநிலைப் பொறியாளர் அவர்கள் தன் மகள் திருமண நன்கொடையாக ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) மையச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## தமிழ்நாடு அரசு
## பொதுப்பணித்துறை

**அனுப்புநர்**

பொறி. இரா. கோபாலகிருஷ்ணன், பி.இ., எப்.ஐ.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
தலைமைப் பொறியாளர் (க) சென்னை மண்டலம்,
(ம) தலைமைப் பொறியாளர் (பொது), பொபது.,
சேப்பாக்கம், சென்னை - 5.

**பெறுநர்**

1. அனைத்து தலைமைப் பொறியாளர்கள், பொ.ப.து., கட்டடம்/நீஆது.,
2. முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது., சென்னை - 5.
3. பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையம், திருச்சி.
4. கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட (கட்டு (ம) பரா) வட்டம், சென்னை - 5.
5. கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (கட்டு (ம) பரா) வட்டம், மருத்துவப்பணிகள், சென்னை- 5.
6. கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (கட்டு (ம) பரா) வட்டம், வேலூர்.
7. கண்காணிப்புப் பொறியாளர், நீஆது., திட்டம் (ம) வடிவமைப்பு வட்டம், சென்னை - 5.

**கடித எண். எஸ்.2(2) / 30863 / 2014 / நாள்: 10.04.2014.**

**அய்யா,**

**பொருள்:** பணியமைப்பு - த.நா.பொ.சா.ப.தொகுதி மற்றும் த.நா.பொ.ப.தொகுதி - உதவிப் பொறியாளராகப் பதவிப் பெயர் மாற்றம் வழங்கத் தகுதிவாய்ந்த இளநிலைப் பொறியாளர்களின் விபரம் கோரல் - தொடர்பாக.

**பார்வை:** எழல்.

--------

தங்களது மண்டலத்தின் / அமைப்பின் / வட்டத்தின் / கோட்டத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்துவரும் இளநிலைப் பொறியாளர் (சிவில்)களில் உதவிப் பொறியாளராக பதவிப் பெயர் மாற்றம் வழங்குவதற்குத் தகுதி பெற்றவர்களின் ஒட்டுமொத்த விபரத்தை இத்துடன் இணைத்துள்ள படிவத்தில் பூர்த்தி செய்து உரிய ஆவணங்களின் நகல்கள் மற்றும் உரிய பரிந்துரையுடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கருத்துருக்களை தனித்தனியே அனுப்பி வைக்காமல், ஒருங்கிணைந்த மற்றும் அனைத்து வகையிலும் முழுமையான கருத்துருக்களை மட்டும் அனுப்பி வைத்திடுமாறும், இளநிலைப் பொறியாளர் பதவியில் பணிவரன்முறைப் படுத்தப்படாத அலுவலர்களின் கருத்துருக்களை அனுப்ப வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு:** படிவம்.

இரா. கோபாலகிருஷ்ணன்,
முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
தலைமைப் பொறியாளர் (க), சென்னை மண்டலம்,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது).

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்

**பிற்சேர்க்கை**

**படிவம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | இளநிலைப் பொறியாளரின் பெயர் | : | |
| 2. | பிறந்த தேதி | : | |
| 3. | இளநிலைப் பொறியாளர் பதவியில் பணியேற்ற நாள் | : | |
| 4. | இளநிலைப் பொறியாளர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தப்பட்ட நாள் மற்றும் செயல்முறை ஆணை விவரம் | : | |
| 5. | இளநிலைப் பொறியாளர் பதவியில் நியமிக்கப்பட்ட விதம் | : | நேரடி நியமனம் (அல்லது) பதவி உயர்வு |
| அ) | நேரடி நியமனம் எனில் தேர்வாணைய வரிசை எண். மற்றும் ஆண்டு | : | |
| ஆ) | பதவி உயர்வெனில் ஊட்டுப் பதவியின் பெயர் | : | |
| இ) | ஊட்டுப் பதவியில் பணிவரன் முறைப் படுத்தப்பட்ட நாள் | : | |
| 6. | பொ.ப.து., கணக்குத் தேர்வு பகுதி-1ல் தேர்ச்சி பெற்ற நாள் | : | |
| 7. | பொ.ப.து., கணக்குத் தேர்வு பகுதி-2ல் தேர்ச்சி பெற்ற நாள் | : | |

| | | | |
|---|---|---|---|
| 8. | இளநிலைப் பொறியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்த நாள் (இளநிலைப் பொறியாளர் பதவியில் தகுதிகாண்பருவம் இல்லையெனில் ஊட்டுப்பதவியில் தகுதிகாண் பருவம் முடித்த நாள் குறிப்பிடல் வேண்டும்) | : | |
| 9. | தேர்ச்சி பெற்ற பொறியியல் பட்டம் | : | பி.இ., / பி.டெக்., |
| 10. | பொறியியல் பட்டப் பிரிவு | : | |
| 11. | பொறியியல் பட்டம் தேர்ச்சி பெற்ற நாள் (கடைசி தேர்வு தேதி) | : | |
| 12. | தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நாள் | : | |
| 13. | பல்கலைக் கழகத்தின் பெயர் மற்றும் பதிவு எண் | : | |
| 14. | பட்டப்படிப்புச் சான்றின் உண்மைத் தன்மையினை உறுதி செய்து பல்கலைக் கழகத்திலிருந்து பெறப்பட்ட கடித எண். மற்றும் நாள் (கடித நகல் இணைக்கப்படல் வேண்டும்) | : | |
| 15. | பொறியியல் பட்டப்படிப்பு பயில்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட விவரம் (செயல்முறை ஆணையின் நகல் இணைக்கப்படல் வேண்டும்) | : | |
| 16. | தற்போது பணிபுரியும் இடம் | : | |
| 17. | ஒழுங்கு நடவடிக்கை / குற்றச்சாட்டு ஏதும் நிலுவையில் உள்ளதா என்ற விவரம் | : | |
| 18. | மேற்காணும் விவரங்கள் சரியானவை மற்றும் பணிப்பதிவேட்டின் சரிபார்க்கப்பட்டது என்பதற்கான செ.பொ., / க.கா., / த.பொ., அவர்களின் சான்று மற்றும் பரிந்துரை | : | |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் தனியாரின் பணிப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு சரியாக உள்ளது என சான்றளிக்கிறேன்.

(ஒப்பம்/-)இரா.கோபாலகிருஷ்ணன்,
முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்)மற்றும்
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்

## இரங்கல் செய்தி

விருதுநகர் கிளை உறுப்பினர் K. ஜெய்சங்கர், உதவிப் பொறியாளர் அவர்களின் தந்தையார் S.P. கிருஷ்ணமராஜா அவர்கள் 21.03.2014 அன்று இயற்கை எய்தினார்.

விருதுநகர் கிளை உறுப்பினர் M.ராஜசேகர், தொழில்நுட்ப உதவியாளர் அவர்களின் மனைவி R.சாந்தி அவர்கள் 18.04.2014 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## ஏப்ரல் 2014 மாத பொறியாளர் இதழில் இருந்து

பொறிஞர் B.திருமால், உதவி செயற்பொறியாளர் அவர்கள் தொடுத்த உச்சநீதிமன்ற வழக்கில் கடந்த 27.11.2013 அன்று மாண்புமிகு நீதியரசர்கள் T.S. தாகூர் மற்றும் விக்ரமஜித்சென் ஆகியோர் அளித்த தீர்ப்பில், " ஒரு நபர் ஒரே நேரத்தில் இரண்டு முதுநிலையில் இருப்பது சரியில்லை என்றும், பகுதிநேர பட்டம் பயின்ற இளநிலைப் பொறியாளர்கள் உதவிப் பொறியாளர் பதவி மாற்றம் பெற்றுக்கொள்ளலாம் எனவும், உதவிப் பொறியாளர் சம்பளம் பெற்றுக் கொள்ளலாம் எனவும், ஆனால் இளநிலைப் பொறியாளருக்குரிய 25% விகிதாச்சாரத்தில் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெறுவதுதான் சரியாக இருக்கும் என கருத்து தெரிவித்திருந்தார்கள். மேற்படி, கருத்திற்கிணங்க, பதவி பெயர் மாற்றம் பெற்ற உதவிப் பொறியாளர்கள், இளநிலைப் பொறியாளர்களின் 25% விகிதாச்சாரத்தில் மட்டும் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு உதவிப் பொறியாளர் முதுநிலையில் பதவி உயர்வு அளிக்கப்பட கூடாது என்றும் வலியுறுத்தி நமது சங்கங்களின் சார்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (WP No. 6744/2014) தொடுக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்.



# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான 1189-ம் ஆண்டு ஸ்ரீ ஜய வருடம் வைகாசி மாதம் 19-ம் தேதி (02.06.2014) திங்கட்கிழமை பூசம் நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தன்று காலை மணி 9.00-க்கு மேல் 10.30-க்குள் கடக லக்ன சுபவேளையில்

நாகர்கோவில், கோட்டார் திரு. K.E. நாகேந்திரன், N.பார்வதி
இரவிபுதூர் தெய்வத்திரு. S. உமதாணு பிள்ளை - U. வேலம்மாள் ஆகியோரின் பேத்தியும்
இரவிபுதூர் திரு. U.V. வினோத்குமார் அவர்களின் அனந்திரவளும் எங்கள் புதல்வியுமாகிய திருநிறை செல்வி



**E.S. பார்கவி (எ) தீபிகா B.E., (Civil)**



என்கிற கன்னிகையை


திருநெல்வேலி, பாளையங்கோட்டை தெய்வத்திரு. முனியப்ப பிள்ளை - தெய்வத்திரு. வனஜா
தக்கலை தெய்வத்திரு. கிருஷ்ணபிள்ளை - தெய்வத்திரு. செல்லம்மாள் ஆகியோரின் பேரனும்
சென்னை திருமுல்லைவாயில் திரு K. சுப்பையா பிள்ளை அவர்களின் அனந்திரவனும்
பாளையங்கோட்டை திரு. M.கண்ணன் - தெய்வத்திரு. K.அய்யம்மாள் அவர்களின்
புதல்வனுமாகிய திருநிறைசெல்வன்

**K. செல்வன் B.E., (Mech.)**

**Executive Engineer L&T, Chennai**

என்கிற வரனுக்கு

இவர்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நாகர்கோவில் வேலைவாய்ப்பு அலுவலகம் அருகில் அமைந்துள்ள **ஸ்ரீ லஷ்மண் மஹால் திருமண மண்டபத்தில்** வைத்து நடைபெறும் திருமணத்திற்கும் அதைச்சார்ந்த சகல விருந்து உபசரணைகளுக்கும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.



**தங்கள் அன்புள்ள,**

E.N. **ஈஸ்வரமூர்த்தி** D.C.E.,
ஒன்றிய பணி மேற்பார்வையாளர்,
இராதாபுரம் பஞ்சாயத்து யூனியன்

**U.V. சண்முகஸ்ரீ, B.E.,**
இளநிலைப் பொறியாளர், பொதுப்பணித்துறை,
நாகர்கோவில்.

**GOVERNMENT OF TAMIL NADU**
**FINANCE (PGC) DEPARTMENT**
**G.O. No. 463, Dated: 27th December, 2013.**

Pension – Contributory Pension Scheme – Maintenance of Accounts – Revised Orders – Issued.

Read the following:-

1. G.O. Ms. No.259, Finance (Pension) Department, dated 6th August 2013.
2. G.O. Ms. No.430, Finance (Pension) Department, dated 6th August 2004.
3. G.O. Ms. No.201, Finance (Pension) Department, dated 21st May 2009.
4. Government letter No.63734/FS/T/PGC/2013 dated 25th November 2013.
5. From the principal Accountant General (A&E), Tamil Nadu, Chennai.18. Letter No. GPF 14/CPS/2013-14/273-123597 dated 27th November 2013.
6. Government Letter No. 70357/FS/T/PGC/2013 dated 16th December 2013.
7. From the Principle Accountant General (A&E) Tamil Nadu, Chennai-18. Letter No. GPF 14/CPS/5/2013-14/284-136520 dated 20th December 2013.

**ORDER:-**

In the Government Order first read above, a new Contributory pension Scheme based on defined contribution has been introduced for all employees who are recruited on or after 01.04.2003. In the Government order second read above, Government inter-alia ordered that the Accountant General will maintain the accounts for the Contributory Pension Scheme as in the case of General Provident Fund and the Index Number to the employees who join the Contributory Pension Scheme will be allotted by the Accountant General on receipt of application from the Head of Department / Heads of Offices in the prescribed form.

2. Subsequently, in the Government Order third read above the work of assigning Index Numbers and maintaining Contributory Pension Scheme in respect of the following employees were entrusted to the Government Data Centre.

1) Teachers of Panchayat Union Schools.
2) Teachers of Aided School / Institutions.
3) Non teaching staff of Panchayat Union Schools.
4) Municipal Corporation and Municipal employees.
5) Non provincialised employees of Town Panchayats.
6) Non provincialised employees of Panchayat Unions.

3. The progress of the work relating to the maintenance of the accounts in respects of Contributory Pension Scheme of Government employees and Teachers of Aided Educational Institutions were reviewed by Government in Consultation with the Accountant General and Commissioner, Government Data Centre and the following decisions were taken thereon.

i) The Contributory Pension Scheme schedules relating to 2013 – 2014 have to be handed over to the Government Data Centre as the posting of Contributory Pension Scheme credit schedules for the year 2013 – 2014 will be made by Government Data Centre.

ii) The applications for admission and allotment of Index number to Contributory Pension Scheme subscribers received up to 31st December 2013 will be processed by Accountant General's office and applications received after the cutoff date may be returned to the departments.

iii) The Contributory Pension Scheme accounts for the year 2012 – 2013 will be completed by the end of January 2014 and the existing data transferred to Government Data Centre.

iv) The missing credit papers and other correspondence relating to Contributory Pension Scheme will be handled by Government Data Centre.

4. In the reference sixth read above Instructions have been Issued to the Accountant General for handing over the Contributory Pension Scheme schedules relating to the year 2013 - 2014 to Government Data Centre with immediate effect..

5. The Account General in the reference seventh read above has requested to issue specific Government orders regarding the following decisions to ensure smooth, handing over of Contributory Pension Scheme functions to the Commissioner, Government Data Centre.

i) The cutoff date for correspondence with Accountant General may be fixed as 31st December 2013 as the adjustments based on the correspondence received has to be closed before the closure of the accounts for 20.12.2013. The applications for admission and allotment of Index number to the Contributory Pension Scheme subscribers received up to 31st December 2013 may be processed by the principal Accountant General and applications received after the cutoff date may be returned to the departments for onward transmission to Government Data Centre.

ii) On closure Contributory Pension Scheme accounts for the year 2012 – 2013, the Principal Accountant General may transfer the existing data to Government Data Centre.

Iii) The missing credit papers and other correspondence received up to 31st December 2013 may be processed by the principal Account General and papers received after the cutoff date may be returned to department for forwarding the same to Government Data Center.

6. The Government has carefully examined the proposal of the Accountant General (A&E) following the decision arrived in the review meeting on the Contributory Pension Scheme and decided to accept the same. Accordingly, in partial modification of the orders issued in Government Order second read above the following revised orders are issued.

(i) The cutoff date for correspondence in respect of Contributory Pension Scheme with Accountant General (A&E) shall be fixed as 31st December 2013 as the adjustments based on the correspondence received has to be closed before the closure of the accounts for 2012 – 2013. The applications for admission and allotment of Index number to the Contributory Pension Scheme subscribers received upto 31st December 2013 shall be processed by the Principal Accountant General and applications received after the cutoff date shall be returned to the departments for onward transmission to Government Data Centre.

(ii) On closure of Contributory Pension Scheme accounts for the year 2012 – 2013, the Principal Accountant General Shall transfer all the existing data to Government Data Centre.


(iii) The missing credit papers and other correspondence received upto 31st December 2013 shall be processed by the Principal Accountant General and papers received after the cutoff date shall be returned to the departments for forwarding the same to Government Data Centre.

7.The Commissioner, Government Data Centre is instructed to take over all the Contributory Pension Scheme schedule for the year 2013 – 2014 maintained by Accountant General and to complete the Contributory Pension Scheme Data entry for the year 2013 – 2014 before the end of March 2014 by outsourcing the required personnel.

8. All Heads of Department shall submit the Contributory Pension Scheme applications for admission and allotment of Index Nos. to the Commissioner of Treasuries and Accounts with effect from 01.01.2014 in the National Security Depository Limited (NSDL) format so as to enable to transfer the same to the Online data. A separate cell shall be formed by commissioner of Treasuries and Accounts for the Contributory Pension Scheme Management which will be located in the Government Data Centre premises and function under the administrative control of the commissioner of Treasuries and Accounts.

9. All the Heads of Departments / Heads of Offices are requested to follow the above guidelines scrupulously.

(By Order of the Government)
K.Shanmugam
Principal secretary of Government



## குங்குமத் தோட்டம்



| செல்வன் | செல்வி | மணநாள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| S. ஆத்ரேஷ் (எ) சஞ்சய், B.Tech., | S. திவ்யா, B.E., | 18.04.2014 | சென்னை |

த/பெ. B.சக்காஜி
உதவி செயற்பொறியாளர்,பொ.ப.து., சென்னை.

மணமக்களை வளம் பல பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

# தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து.,

சேப்பாக்கம், சென்னை - 600 005.

## பொறியாளர் குடும்ப நலநிதி

(பொங்கும் நிதி)

## இரண்டாம் கட்ட திட்ட விண்ணப்ப படிவம்

1. பெயர்: ... .... ... ... ... ... ... ... ... ... ...
2. தகப்பனார் / கணவர் பெயர்: ... ... ... ... ... ... ... ... ...
3. பிறந்த நாள்: ... ... ... ... ... ... ... ... ... ...
4. பதவி: ... ... ... ... ... ... ... ... ... ... ...
5. உறுப்பினர் / ஆயுள் உறுப்பினர் எண்: ... ... ... ... ... ... ...
6. பணியில் சேர்ந்த நாள்: ... ... ... ... ... ... ... ... ...
7. பணியிலிருந்து ஓய்வு பெறும் நாள்: ... ... ... ... ... ... ...
8. பொங்கும் நிதி முதல் கட்ட திட்ட உறுப்பினர் எண்: ... ... ... ... ...
9. முகவரி: அ) தற்போதையது:

   ஆ) நிலையானது:

10. வாரிசுதாரரின் பெயர் / உறவு: ... ... ... ... ... ... ... ...
11. வாரிசுதாரரின் முகவரி: ... ... ... ... ... ... ... ... ...
12. உறுப்பினர் தற்போது

    எந்த கிளையை சார்ந்தவர்: ... ... ... ... ... ... ... ...

நான் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் உறுப்பினர் என்றும், மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவை என்றும் சான்றளிக்கிறேன். என்னுடைய விண்ணப்பத்தை பரிசீலித்து பொறியாளர் குடும்ப நலநிதியின் உறுப்பினராக அனுமதிக்கக் கோருகிறேன். நமது சங்கத்தில் தொடர்ந்து உறுப்பினராக இருப்பேன் என்றும், பொறியாளர் குடும்ப நலநிதி தொடர்பான விதிகள் அனைத்தையும் அறிந்துக்கொண்டேன் என்றும், தற்போதைய விதிமுறைகளுக்கும் மற்றும் காலகட்டத்தில் மாறுதல் செய்யப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் என்னை முழுமையாக ஆட்படுத்திக்கொள்வேன் என உள்ள உணர்வோடு உறுதியளிக்கிறேன்.

உறுப்பினர் கையொப்பம்.

### அலுவலக உபயோகத்திற்கு

உறுப்பினரின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டபின், அவரை பொறியாளர் குடும்ப நலநிதி **2 அ / ஆ** திட்டத்தின் கீழ் பொங்கும் நிதி எண்:........................... வழங்கப்பட்டு உறுப்பினராக ஏற்க ஆனுமதி வழங்கப்படுகிறது.

தலைவர் பொதுச் செயலாளர் செயலாளர் (பொங்கும் நிதி)

# தமிழ்நாடு பொறியியல் சங்கம்
## சேப்பாக்கம், சென்னை-5.
## பொறியாளர் குடும்ப நல நிதித்திட்டம் (பொங்கும் நிதி)
## பணியினின்று ஓய்வு பெறும் உறுப்பினர் குடும்ப நலநிதி பெற வேண்டி கோரும் விண்ணப்பம்

1. உறுப்பினர் பெயர் மற்றும் பொங்கும் நிதி
   உறுப்பினர் எண் :
2. தகப்பனார் பெயர் :
3. பிறந்த நாள் :
4. ஓய்வு பெற்ற நாள் :
5. உறுப்பினர் முகவரி
   (காசோலை வழங்க வேண்டிய முகவரி) :
6. உறுப்பினர் சார்ந்த கிளையின் பெயர் :

பொங்கும் நிதி விதிகளின் படி எனக்கு சேரவேண்டிய குடும்பநல நிதி தொகை அளிக்கும்படி கோருகிறேன்.

உறுப்பினர் கையொப்பம்

உறுப்பினர் சார்ந்துள்ள கிளைச் செயலர் / பொருளாளரின் பரிந்துரைகள் (உறுப்பினர் கட்டணம் செலுத்திய விவரங்கள் மற்றும் சான்றுகள்)

செயலாளர் / பொருளாளர்

## முன் ஒப்புகை ரசீது

தமிழ்நாடு பொறியியல் சங்கம் - பொங்கும் நிதியிலிருந்து காசோலை எண்: .
நாள்: மூலம் ரூ. (ரூபாய் ) பொறியாளர் குடும்ப நல நிதிக்கு ரூ. சான்றிதழ் Iக்கு ரூ. மற்றும் IIக்கு அ/ஆக்கு ரூ. பெற்றுக் கொண்டேன்.

உறுப்பினர் கையொப்பம்

## பொங்கும் நிதி குழுவின் செயல்முறை

1. உறுப்பினர் விண்ணப்பம் கிளை செயலாளரின்
   பரிந்துரைகளுடன் குழுவிற்கு வந்த நாள் :
2. குடும்ப நல நிதி உறுப்பினர் எண் | I
   மற்றும் அனுமதிக்கப்பட்ட நாள் | II அ/ஆ :
3. உறுப்பினர் திட்டத்திலிருந்த
   கால இடைவெளி I வருடங்கள் மாதங்கள்
   II அ/ஆ வருடங்கள் மாதங்கள்
4. உறுப்பினருக்கு வழங்கப்பட வேண்டிய
   தொகை I ரூ.
   II ரூ.

   ........................................

   மொத்தம் ....

   ........................................
5. உறுப்பினருக்கு வழங்கப்பட்ட தொகை
   காசோலை எண் & நாள் முதலியன :

பொதுச் செயலாளர் செயலாளர் (பொங்கும் நிதி)

## "தாயே உன்னை வணங்குகின்றேன்"

**பொறி. ச.பெரியசாமி, DCE., BE., MBA., MHRM., PGDCA.,**
உதவி செயற்பொறியாளர் (ப.நி) மாநில தலைவர்,
வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பொறியாளர்கள் சங்கம்,
மதுரை - 20.
அலைபேசி எண்: 94434 64805.

**அன்புடையீர்,**

வணக்கம். 1972ம் ஆண்டு, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று, பாலிடெக்னிக் முதலாண்டு சேர்ந்து, 1973ம் ஆண்டு Pre. Technical Course முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றேன்.

அதனைத் தொடர்ந்து மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரியில், பி.இ., நேரடி வகுப்பில் சேர்வதற்கு விண்ணப்பித்து, நேர்முகத் தேர்வில் பங்கேற்று காத்திருப்போர் பட்டியலில் இருந்து, அன்றைய அரசியல் குறுக்கீட்டினால் பி.இ. சேரும் வாய்ப்பு நழுவி விட்டது. மிகுந்த மன வேதனை அடைந்தேன்.

எனது தந்தையின் வழிகாட்டுதலினால், பாலிடெக்னிக்கில், டிப்ளமோ கல்வியினைத் தொடர்ந்து 1975ம் ஆண்டு முதல் வகுப்பில் வெற்றி பெற்றேன்.

பின்னர் நெடுஞ்சாலைத் துறை, குடிநீர் வடிகால் வாரியத்தில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வந்து, தாட்கோவில், ஓர்க் அஸிஸ்டெண்ட்டாக, 1976ம் ஆண்டில் நெல்லை மாவட்டம் வாசுதேவநல்லூரில் பணியேற்றேன்.

பணியேற்ற சில நாட்களில், ஒரு மாலைப்பொழுதில், பணித்தளத்தில், கூரை கான்கிரீட் பணியில் இருந்த போது, ஒருவர் கீழே இருந்து, தம்பி இறங்கி வாருங்கள் என அழைத்தார். நானும் பக்கத்து பணித்தளத்தில் இருந்த நண்பர் சங்கரனும் இறங்கி வந்தோம்.

அப்போது, அவர் நீங்கள் எந்த பாலிடெக்னிக்கில் படித்தீர்கள்? டிப்ளமோ படித்தவர்களுக்கு என டிப்ளமோ பொறியாளர் பேரவை என்கின்ற அமைப்பு இருக்கிறது. வரும் சனிக்கிழமை, திருநெல்வேலி சந்திப்பு அருகே இருக்கும் சந்திராவிலாஸ் ஹோட்டலில் டிப்ளமோ பொறியாளர் பேரவை கூட்டம் நடக்கின்றது என்றும், நீங்கள் அவசியம் பங்கேற்கவும் என தெரிவித்து சென்றார். அவர்தான், பொதுப்பணித்துறை பொறியாளர் ஜெயராஜ் அவர்கள் என்பதனை பின்னர் தெரிந்து கொண்டேன்.

அவரின் அறிவுரைப்படி, சந்திராவிலாஸ் ஹோட்டலில், டிப்ளமோ பொறியாளர் பேரவை கூட்டத்தில் பங்கேற்றேன். பொறியாளர் இராகவன் (த.கு.வ.வாரியம்) அவர்கள் தலைமையேற்று நடைபெற்ற கூட்டத்தில் கருடப்பன், பூதலிங்கம் போன்ற பொதுப்பணித்துறை பொறியாளர்களை சந்தித்த நினைவு.

பின்னர், தாட்கோவில் பணிநீக்கம் செய்யப்பட்டதால், மீண்டும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியேற்றேன். பின்னர் 1978ம் ஆண்டு, வேளாண்மைப் பொறியியல் துறையில் இளநிலை வரைதொழில் அலுவலராக பணியேற்றேன்.

அப்போதும், நெஞ்சில் பி.இ., படிக்க இயலவில்லையே என வருந்தினேன். அப்போது எனது தந்தையார், இரண்டு ஆண்டுகள் பணிமுடித்தவுடன், பகுதிநேர கல்வி வாயிலாக பி.இ., படிப்பதற்கு மதுரைக்கு மாறுதலில் செல் என்று ஆலோசனை வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து, 1980ம் ஆண்டு, மதுரைக்கு அருகில் உள்ள திருப்புவனத்திற்கு மாறுதலாக வந்து 1981ம் ஆண்டு மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரியில் பகுதிநேர பி.இ., படிப்பதற்கு சேர்ந்தேன். 1984ம் ஆண்டு பி.இ., முதல் வகுப்பில் எனது 28வது வயதில் பி.இ., பட்டம் பெற்றேன்.

இப்படி பகுதி நேர பி.இ., படிப்பதற்கு வாய்ப்பினை பெற்றுத் தந்தது தமிழ்நாடு பொறியியல் சங்கம் என்பதனை பின்னாளில் தான் தெரிந்து கொண்டேன். பகுதிநேர பி.இ., படிக்கும்போது, தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள், முத்துமாணிக்கம், கிருஷ்ணமூர்த்தி, தியாகராஜன், தட்சிணாமூர்த்தி, மீனாட்சிசுந்தரம் போன்ற இயக்க உணர்வு மிக்க போராளிகளை சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது.

இக்காலகட்டத்தில், தமிழ்நாடு பொறியியல் சங்கம் மதுரை கிளை கூட்டத்தில் பங்கேற்று பிதாமகன் அப்பாஸ் மந்திரி அவர்களின் எழுச்சி மிகு உரையினை கேட்கும் வாய்ப்பினைப் பெற்றேன்.

பின்னர், 1985ம் ஆண்டு இளநிலைப் பொறியாளராக பதவி உயர்வு பெற்று, பணியேற்ற பின்பு, 1987ம் ஆ்ண்டு மதுரை பொதுப்பணித்துறை வளாகத்திற்குள் அலுவலக கூட்டங்களில் பங்கேற்றபோது, நீரியியல் கோட்ட அலுவலகத்தில் உதவிப் பொறியாளராக பணிபுரிந்து வந்த பாசமிகு அண்ணன், போர்வாள் மீசைக்காரர் எம்.ஊர்க்காவலன் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவரின் போர்க்குணமும், இயக்கத்தில் பணியாற்றிய விதமும் கண்டு எனது தொழிற்சங்க உணர்வு, உரமேற்றப்பட்டது. அவரால் சிறப்பாக நடத்தப்பட்ட, டிப்ளமோ பொறியாளர் பேரவை பல கூட்டங்களில் பங்கேற்ற நினைவுகள் இன்று வரை நெஞ்சில் நீங்காது இடம் பெற்றுள்ளது.

பின்னர் 1987ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பொறியாளர்கள் சங்கத்தின் மாநில இணை செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, எனது தொழிற்சங்க பயணம் தொடர்ந்து அக்காலகட்டத்தில் தான், தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் பீஸ்மர்கள், வெங்கடசுப்பு, சி.பி.சண்முகம் போன்றவர்களை சந்தித்து விவாதித்திட வாய்ப்பு கிட்டியது.

இந்தக் காலகட்டத்தில், டிப்ளமோ பொறியாளர் பேரவை, இளநிலைப் பொறியாளர் ஊதியமாற்றம் குறித்து நடத்திய ஊர்வலத்தில், வேளாண்மைப் பொறியாளர்கள் சங்கத்தின் சார்பாக, பெருந்திரளான உறுப்பினர்களை பங்கேற்றிட வைத்தது என் நெஞ்சில் நிழலாடுகின்றது. அந்த எழுச்சிமிகு ஊர்வலத்தினை தலைமையேற்று நடத்தியது அப்போதைய டிப்ளமோ பொறியாளர் பேரவையின் தலைவர் சுவாமிநாதன் மற்றும் அண்ணன் சி.பி.சண்முகம் அவர்கள் தான்.

பின்னர் 1991ம் ஆண்டு எங்கள் சங்கத்தின் சார்பாக, நெடுநாட்களாக, தேர்வாணைக் குழுவின் ஒப்புதலுக்காக நிலுவையில் இருந்த, 175 இளநிலைப் பொறியாளர்களின் பணிவரன்முறை தொடர்பான, கோப்பினை நகர்த்துவதற்கு தேர்வாணைக்குழு உறுப்பினர், ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் நாகேஸ்வரன் அவர்களை, சி.ப.சண்முகம் அவர்களின் அறிமுகத்தோடு, சந்தித்து, அக்கோப்பிற்கு வடிவம் கிடைத்திட செய்த நிகழ்வு மறக்க இயலாத ஒன்று.

பின்னர் 1993ம் ஆண்டு, எங்கள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு 2011ம் ஆண்டுவரை, 18 ஆண்டுகாலம் இடைவிடாது பொதுச் செயலாளராக பணியேற்றினேன். 2011ம் ஆண்டு மாநில தலைவராக பொறுப்பேற்றேன். பொதுச் செயலாளராக பொறுப்பேற்றதிலிருந்து தாய்ச் சங்கம் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தோடும் அதன் பொறியாளர்களோடும் எனது தொடர்பு மிகவும் நெருக்கமானது.

1993ம் ஆண்டு எங்கள் சங்கத்திற்கென சொந்தமாக கட்டிடம் சென்னையில் வாங்கினோம். அதுவரை எங்களது சங்க பொறுப்பாளர்கள், சென்னை வரும்போது தமிழ்நாடு பொறியியல் சங்க இல்லத்தில் தான் தங்குவோம். எங்களுக்கு அந்த இல்லம் வேடந்தாங்கலாகும்.

எனது அலுவலகப் பணியினை பொறுத்தமட்டில் 1978 முதல் 1985 வரை இளநிலை வரை தொழில் அலுவலர் பதவி 1985 முதல் 2007 வரை உதவிப் பொறியாளர் பணி 2007ல் உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று 31.03.14ல் வயது முதிர்வில் ஓய்வு பெற்றுவிட்டேன். இம்மடலை எப்படியோ ஆரம்பித்து, எப்படி முடிப்பது என்றே தெரியவில்லை. இருப்பினும், தமிழ்நாடு பொறியியல் சங்கம், எனக்குள் ஏற்படுத்திய ஆக்கபூர்வமான, உணர்வு பூர்வமான எண்ணங்களை கீழே (அ) முதல் (ஔ) வரை பதிவு செய்கின்றேன்.

(அ) 1976ம் ஆண்டு அறிமுகமே இல்லாத, என்னை சந்தித்து, தொழிற்சங்க உணர்வினை தூண்டிவிட்ட, தமிழ்நாடு பொறியியல் சங்க உறுப்பினர் மறைந்த பொறியாளர் செயராஜ் அவர்களுக்கு எனது வீரவணக்கம்.

(ஆ) நிர்வாகத்திலும், தமிழ் புலமையிலும், தேர்ச்சி பெற்றவரும், எழுச்சி மிக உரை நிகழ்த்துபவருமான, தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் தூண் மறைந்த அப்பாஸ் மந்திரி அவர்களுக்கு வீர வணக்கம்.

(இ) 1977ம் ஆண்டு, 248 இளநிலை பொறியாளர்களின் பணி நீக்கம் தொடர்பாக, சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த தியாகச் செம்மல் சி.ப.சண்முகம், கோல்டுவின் இம்மானுவேல், அடைக்கலதுரை ஆகிய போராளிகள், எனது தொழிற்சங்க உணர்விற்கு விதை ஊன்றியவர்கள். அவர்கள் மூவருக்கும் எனது வீர வணக்கங்கள்.

(ஈ) தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் மாநில பொறுப்பாளர்கள், வி.எஸ்.ஜானகிராமன், வெங்கடசுப்பு, சி.ப.சண்முகம், சண்முகபெருமாள், பார்த்திபன், சேசகிரி, தி.பா.பலசுப்பிரமணியன், எ.எஸ்.இராமசாமி, நந்தகுமார் ஆகியோர்கள் என் மீது அன்பு செலுத்தி ஆலோசனை வழங்கியவர்கள்.

மாவட்ட பொறுப்பாளர்களாக இருந்த சாமுவேல்ராஜ், ஞானபண்டிதன், பாலகிருஷ்ணன், பெரியசாமி, குலசேகரன் ஆகியோர்கள் என் மீது செலுத்திய அன்பை என்னால் மறக்க முடியாது.

தற்போது மாவட்ட பொறுப்பாளராக இருக்கும், விவேகத்தின் இருப்பிடம், செயல்வீரர் அன்புத்தம்பி சி.பி.மோகன்குமார் அவர்கள் எனக்கும், எங்கள் சங்கத்திற்கு உதவிய நிகழ்வுகளையும் நான் என்றும் மறக்க மாட்டேன்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைவருக்கும் எனது வீர வணக்கங்கள்.

(உ) தொழிற்சங்க உணர்வுகளோடு நான் உலா வந்த தருணத்தில், அதற்கு உரமேற்றிய பொறியாளர், போர்வாள் மீசைக்காரர், கொள்கை வீரர் பாசமிகு அண்ணன் எம். ஊர்க்காவலன் அவர்களுக்கு வீர வணக்கங்கள். அவரது தலைமைப் பண்பு, அரவணைத்து செல்லும் மனோபாவம் செயல்திறன், இளைஞர்களுக்கு ஒரு உந்துதலாக இருக்கும் என்பது உறுதி.

(ஊ) ஒவ்வொரு ஊதியக்குழுவிலும், இளநிலைப் பொறியாளர்களின் சம்பள விகிதத்தில் உநீதி இழைக்கப்படும் போதெல்லாம் முதல் குரல் எழுப்பி, அனைத்து சகோதரத்துறை சங்கங்களையும் இயக்கி வைத்திடும், தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு என் வீர வணக்கங்கள்.

(எ) டிப்ளமோ கல்வித் தகுதியுடையவன், மேலே படிப்பதற்கு வாய்ப்பே இல்லை என்கின்ற நிலையினை போக்கி, பகுதிநேர கல்வி வாயிலாக பி.இ., படிப்பதற்கு உரிய

அரசாணை பெற்றுத் தந்ததோடு பகுதிநேர கல்வி வாயிலாக பி.இ., பட்டம் பெறும் இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பெயர் மாற்றம் வழங்கிட ஏதுவான அரசாணை மற்றும் மூதுரிமை தொடர்பான அரசாணைகள் பெற்றுத் தந்த தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு எனது வீர வணக்கங்கள்.

(ஏ) வரைவாளராக பணிபுரிந்து பி.இ., பட்டம் பெற்று பின்னர் இளநிலைப் பொறியாளராக பதவி உயர்வு பெற்ற திரு. ப்பி.பி.மோகன் அவர்களுக்கு இளநிலைப் பொறியாளர் பணியேற்ற நாளிலிருந்து உதவிப் பொறியாளர் பெயர் மாற்றம் பெற்றுத் தந்ததால், அவர் கண்காணிப்புப் பொறியாளர் வரை பதவி உயர்வு பெற முடிந்தது. மேற்படி பெயர் மாற்ற உத்தரவினை பின்பற்றி, வேளாண்மைப் பொறியியல் துறையில் ஏறத்தாழ 150 பேருக்கு, உதவிப் பொறியாளர் பெயர் மாற்றம் பெறப்பட்டது. இதற்காக, என் சார்பாகவும், மெற்படி பெயர் மாற்றம் பெற்ற 150 உதவிப் பொறியாளர்கள் சார்பாகவும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு வீர வணக்கங்கள்.

(ஐ) அனைத்து துறை பட்டயப் பொறியாளர்களையும், ஒருங்கிணைப்பதற்காக, 1970ம் ஆண்டு, டிப்ளமோ பொறியாளர் பேரவை என்கின்ற அமைப்பினை தோற்றுவித்திட மூலகாரணமாக இருந்த தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு என் வீர வணக்கங்கள்.

(ஒ) தமிழ்நாடு பொறியியல் சங்கம் பெற்றுத் தந்த, உதவிப் பொறியாளர் பெயர் மாற்றம் தொடர்பான விதித் திருத்தம், மூதுரிமை தொடர்பான அரசாணைகளைக் காண்பித்து, வேளாண்மைப் பொறியியல் துறைக்கென, பெயர் மாற்றம் தொடர்பான, விதித்திருத்த அரசாணை பெற்றதால், என் உள்ளிட்டோர் உதவி செயற்பொறியளார் பதவி உயர்வு பெற முடிந்தது. எங்கள் துறையில் நான்கு பட்டயப் பொறியாளர்கள் பகுதி நேர கல்வி வாயிலாக பி.இ., பட்டம் பெற்றதால் தான், தலைமைப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற முடிந்தது. இதற்காக, தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு எனது வீர வணக்கங்கள்.

(ஓ) தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கென பல இடங்களில், இல்லங்களை உருவாக்கியதால், அனைத்து துறை பட்டயப் பொறியாளர்கள் தங்குவதற்கு வழிவகை செய்திட்ட, தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு எனது வீர வணக்கங்கள்.

(ஔ) அனைத்து துறை பட்டயப் பொறியாளர்களுக்கும், தாய்ச் சங்கமான, நூற்றாண்டு விழா காண இருக்கும், தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு வீர வணக்கங்கள்.

இறுதியாக, தமிழ்நாடு பொறியியல் சங்கம் என்பது ஒரு மிகப் பெரிய ஆலமரம். அதன் விழுதுகள் தான் சகோதர சங்கங்கள். அது தான் தாய்ச்சங்கம். அந்த தாயினை வணங்குகிறேன். தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு விழாவினை நாம் அனைவரும் இணைந்து நடத்திட உறுதி பூணுவோம்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் தளபதி, போர்க்குணம் கொண்ட கொள்கை வீரன், நேர்மையின் பிறப்பிடம், அன்பு சகோதரர் பொதுச் செயலாளர் D. முருகேசன் அவர்களின் கரத்தினை வலுப்படுத்திட, தமிழ்நாடு பொறியியல் சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். அவரது பணி சிறக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்து, இனி வருங்காலங்களில், இப்பொறியியல் கதிர் வாயிலாக தங்களை தொடர்பு கொள்வேன் என தெரிவித்து விடை பெறுகின்றேன்.

என்றென்றும்,
தங்களின் அன்பு சகோதரன்
ச. பெரியசாமி
மாநில தலைவர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பொறியாளர்கள் சங்கம்.

Under Postal Regd No. TN/CH/(C)/358/12-14 & TN/PMG (CCR) WPP No.308/2012-14 MAY 2014
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

# மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

**நாள்: 11.05.2014 ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணி**

**இடம்: பொறியாளர் சி.ப.சண்முகம் அரங்கம்,**
**10, லால்முகமது தெரு,**
**சேப்பாக்கம், சென்னை - 5.**

மையச் சங்க பொறுப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

- தமிழ்நாடு பொறியியல் சங்கம்.

நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Published on 3.5.2014 Posting on 5.5.2014
REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY: **Er. D. MURUGESAN,** D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: **Er. S. KANNAN,** D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. **K.P.THIYAGARAJAN** AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5 PHONE 2854 8223